முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்த நாளையொட்டி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அரசு சார்பாக ஈரோடு ரிங் ரோடு அங்கப்பாளையத்தில் மரக்கன்றுகளை நட்டார். இந்நிகழ்வில் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு மாநகராட்சியில் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் கூறும் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர்

அண்ணாமலை மீது - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவதூறு வழக்கு!

சென்னை - சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்!

சென்னை, ஜூன் 12 - தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மீது தி.மு.க. பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., சென்னை, சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

மனுதாரர் சார்பில் இவ்வழக்கை, வழக்கறிஞர் ரிட்சர்ட்சன் தாக்கல் செய்தார்.

கடந்த மாதம் 14ஆம் தேதி, தி.மு.க.வினர் 12 பேரின் சொத்து பட்டியல் என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை அறிக்கை ஒன்றை வெளியிட்டார். மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க.வினர் குறித்து பல்வேறு உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளையும் அவர் முன்வைத்தார்.

இதையடுத்து குற்றச்சாட்டப்பட்டவர்களிடம் இருந்து அண்ணாமலைக்கு நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. ஆனால், தான் தெரிவித்த குற்றச்சாட்டை மறுக்க முடியாது என்றும், வழக்கை எதிர்கொள்ளத் தயார் என்றும் அண்ணாமலை தரப்பில் பதில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அண்ணாமலை மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் கடந்த 10ம் தேதி கிரிமினல் அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு 8 வாரத்துக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்ற கழகக் குழுவின் தலைவரும், தி.மு.க. பொருளாளருமான டி.ஆர்.பாலு, அண்ணாமலைக்கு எதிராக சென்னை சைதாப்பேட்டை 18வது நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் அவதூறு வழக்கு தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:-

1957ம் ஆண்டு முதல் அரசியலில் இருந்து வருகிறேன். எம்.பி.யாகவும், மத்திய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளேன். கட்சியிலும் பல்வேறு பொறுப்புகளை வகித்துவருகிறேன். எனக்கு சமுதாயத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் நற்பெயரும் மரியாதையும் உள்ளது. அதை சீர்குலைக்கும் விதமாக, களங்கம் ஏற்படுத்தும் விதமாக அண்ணாமலை அவதூறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எனக்கு எதிராகச் சுமத்தியுள்ளார்.

எங்கள் குடும்பத்தினர் 21 நிறுவனங்களில் பல கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் அவர் கூறும் நிறுவனங்களில், 3 நிறுவனங்களில் மட்டும் சிறு முதலீடு செய்து உள்ளேன். மற்ற நிறுவனங்களில் பங்குதாரராகவும் இல்லை. பொய்யான குற்றச்சாட்டைக் கூறி எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதற்காக அண்ணாமலை எனக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். இதுதவிர அவர் மீது கிரிமினல் அவதூறு சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

டி.ஆர்.பாலுவுடன் வந்த தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

அண்ணாமலை பேட்டியளித்த அரை மணி நேரத்துக்குள்ளேயே தி.மு.க. சார்பில் பதில் தந்து விட்டோம். அவருக்கு நோட்டீஸ் அனுப்பி ஒரு மாதமாகியும் இதுவரை சட்ட ரீதியாகப் பதில் சொல்லவில்லை. அறிக்கை மட்டுமே வெளியிடுகிறார். போதுமான அவகாசம் கொடுத்த பிறகும், மன்னிப்பு கேட்காததால் 2 நாட்களுக்கு முன்பு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் சார்பிலும், தற்போது டி.ஆர்.பாலு சார்பிலும் வழக்குத் தொடர்ந்துள்ளோம்.

ஓராண்டு தண்டனை பெறுவார்!

தி.மு.க.வுக்கு, யார் மீதும் பொய் வழக்கு போடும் பழக்கம் கிடையாது. தி.மு.க. சார்பில் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளிலும் வெற்றி பெற்றுள்ளோம். நிச்சயமாக அண்ணாமலை ஓராண்டு தண்டனை பெறப் போகிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

மூத்த வழக்கறிஞர் பி. வில்சன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் அப்போது உடன் இருந்தனர்.

தஞ்சாவூர் மாவட்ட

திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியல்!

மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தஞ்சாவூர் மாவட்டத்திற்கான திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தல் 23.06.2023 அன்று நடைபெற உள்ளது. மேற்படி தேர்தலில் கீழ்காணும் கழகத்தினர்கள் ஊரக பகுதி மற்றும் மாநகர, நகர, பேரூர் பகுதிகளுக்கான வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஊரக பகுதிக்கான வேட்பாளர்கள்.

வ.எண்.	மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	வேட்பாளர்கள் பெயர்
1	மாவட்ட ஊராட்சி 4 வது வார்டு உறுப்பினர்	சா.சரவணன்
2	மாவட்ட ஊராட்சி 6 வது வார்டு உறுப்பினர்	ஜெ.முரளி
3	மாவட்ட ஊராட்சி 8 வது வார்டு உறுப்பினர்	கோ.தாமரைச்செல்வன்
4	மாவட்ட ஊராட்சி 12 வது வார்டு உறுப்பினர்	ஜெ.பரிமளம்
5	மாவட்ட ஊராட்சி 13 வது வார்டு உறுப்பினர்	த. உதயன்
6	மாவட்ட ஊராட்சி 19 வது வார்டு உறுப்பினர்	ஆ.சுபா
7	மாவட்ட ஊராட்சி 23 வது வார்டு உறுப்பினர்	ஞா.செந்தாமரை
8	மாவட்ட ஊராட்சி 26 வது வார்டு உறுப்பினர்	அ.மூர்த்தி

மாநகர/நகர/ பேரூர் பகுதிக்கான வேட்பாளர்கள்

வ எண்	மாநகராட்சி/நகராட்சி/ பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள்	வேட்பாளர்கள் பெயர்
1	தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு 18 உறுப்பினர்	அ.சசிக்கலா
2	கும்பகோணம் மாநகராட்சி 32 வார்டு உறுப்பினர்	எ.சாகுல்ஹமீது
3	பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு 19 உறுப்பினர்	ஆர்.ரவிக்குமார்
4	திருவிடைமருதூர் பேரூராட்சி வார்டு 08 உறுப்பினர்	சுந்தர.ஜெயபால் (எ) மயில்வாகணன்

தஞ்சாவூர் மாவட்டத்திற்கான ஊரக மற்றும் மாநகர, நகர, பேரூர் திட்டக்குழு உறுப்பினர்கள் பொறுப்பிற்கு போட்டியிடுவதற்காக தஞ்சாவூர் மாவட்ட கழகத்தின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மேற்கண்ட கழக வேட்பாளர்களை மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வெற்றிபெற செய்திட அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

சு.கல்யாணசுந்தரம் எம்.பி.
செயலாளர்,
தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க.

துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ.
செயலாளர்,
தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க.

கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ.
செயலாளர்,
தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி தருமபுரி கிழக்கு மாவட்டம் சார்பில் மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி ஏற்பாட்டில் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து தருமபுரி ரோட்டரி ஹாலில் இலவச கண்சிகிச்சை முகாம் மற்றும் பொதுமக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. உடன் நகர செயலாளர் நாட்டான் மாது, நகர் மன்ற தலைவர் லட்சுமி, நகர் மன்ற துணைதலைவர் நித்யா அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் ரேணுகாதேவி, அவைத்தலைவர் செல்வராஜ், நல்லம்பள்ளி துணை சேர்மன் பெரியண்ணன், ஐ.டி விங் கௌதம், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஹரிவிக்னேஷ், முன்னாள் நகர செயலாளர் மே.அன்பழகன், தடங்கம் இளைய சங்கர், ஜி.பழனிச்சாமி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் பாகனேரி கத்தப்பட்டில் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை முன்னிட்டு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, கேஆர்.பெரியகருப்பன், பி.மூர்த்தி ஆகியோர் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், பொதுக்குழு உறுப்பினர் பி.டி.ஆர்.முத்து ஆகியோர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

ஈரோட்டில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா!

அமைச்சர் சு.முத்துசாமி - ஈ.வெ.கி.ச.இளங்கோவன் எம்.எல்.ஏ. பங்கேற்பு !

ஈரோடு, ஜூன் 12 - ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை, திண்டல் அத்தப்பம்பாளையம் பிரிவு பகுதியில் (ரிங் ரோடு) பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் மரக்கன்றுகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா தலைமையில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வெ.கி.ச.இளங்கோவன் மற்றும் ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு. நாகரத்தினம் ஆகியோர் முன்னிலையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி நட்டு வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவிக்கையில்,

முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்ற த்திற்காக எண்ணற்ற பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, கடந்த 2 ஆண்டுகளில் ஈரோடு மாவட்டம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து பகுதிகளிலும் எண்ணற்ற திட்டங்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழக மக்களின் நெஞ்சில் நீங்கா இடம்பிடித்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் பல்வேறு திட்டப்பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும், இந்த ஒரு வருட காலம் கலைஞர் பிறந்தநாள் கொண்டாடும் நோக்கமாக மட்டும் இல்லாமல் பொது மக்களுக்கு எந்த அளவிற்கு நன்மைகள் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு செய்ய வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். மேலும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் தமிழகம் முழுவதும் சாலை ஓரங்களில் சுமார் 5,00,000 மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் கடந்த 07.06.2023 சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் தொடங்கி வைத்தார்கள். அந்த வகையில் இன்றைய தினம் (10.06.2023) ஈரோடு கோட்டத்தின் சார்பாக சுமார் 12,000 மரக்கன்றுகள் நடப்படவுள்ளது.

அதன் துவக்கமாக, ஈரோடு பெருந்துறை சாலை, அத்தப்பம்பாளையம் பிரிவு பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. மேலும், ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சுமார் ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளும் துவங்கப் பட்டுள்ளது என தெரிவித்தார்.

தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள், ஈரோடு மாநகராட்சிக் குட்பட்ட வார்டு எண் 56 சியோன் நகர் பகுதியில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியினையும், திருப்பதி கார்டன் பகுதியில் மாநில நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ், ரூ.122.00 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் அமைக்கும் பணியினையும், வார்டு எண் 55 வேலன் நகர் பகுதியில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியினையும், வார்டு எண் 55 மார்க் பள்ளி வீதியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியினையும், வார்டு எண் 59 லோகநாதபுரம் பகுதியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின கீழ், ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைக்கும் பணியினையும் மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், நீர்வளத்துறையின் சார்பில் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் வெண்டிபாளையம் தடுப்பணை பிரதான சாலையில் இருந்து கல்யாணசுந்தரம் வீதி தமிழ் நகர் பகுதிக்கு செல்லும் காலிங்கராயன் வாய்க்கால் கரையை மேம்படுத்தும் பணியினையும் என மொத்தம் ரூ.227.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்டப்பணிகளை துவக்கி வைத்து திட்டப்பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.சரவணன், கோட்டப் பொறியாளர் மாதேஸ்வரன், மாநகர பொறியாளர் திரு. விஜயகுமார், ஈரோடு வட்டாட்சியர் ஜெயகுமார், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.பழனிச்சாமி, குறிஞ்சி.என். தண்டபாணி, மாமன்ற உறுப்பினர்கள், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள், சாலைப் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

துரை சாம்பசிவம்

ஜூன் 12 (2016)

வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957–ல் பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.

கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவுமம் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் "தாடிக்காரர்'என அழைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.